Physically handicapped for medical profession.

* 214 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government have issued any instruction providing priorities for the physically handicapped candidates for admission into the Medical Colleges in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) உடலூன முற்றோர் மருத்துவப் பணிக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கவியலாது என்பதால், அவர்களுக்கு முன்னுரிமை எதையும் அரசு அளிக்கவில்லை.

திரு. என். டென்னிஸ்: பிறவியிலேயே உடல் ஊனமுற்றவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவது அரசின் கடமையாதலால், மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்கு, இவர்களுக்குப் ப்ரையாரிடி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்கு உடல் நன்றாக இருப்பவர்களே, மெடிகல் எக்சாமினேஷன் செய்யப் பெற்று, மெடிகலி பிட் என்ற சர்டிபிகேட்டைப் பெற்ற பின்னரே சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். இப்படி மருத்துவர்களாக வரக்கூடியவர்கள் மனவலிமை, உடல் வலிமை பெற்றவர்களாக அமைவது சமுதாயத்திற்கு லாபமே தவிர உடல் ஊனம் உள்ளவர்களே டாக்டராக வந்து சிகிச்சை அளிக்கிறபோது இவர்களிடத்து வருகிற நோயாளிகளுக்கு என்ன நம்பிக்கை ஏற்பட முடியும். முன்பு உயரம் குறைந்தவர்களை செவிலியர்களாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள், இந்த செவிலியர்களிடம் நம்பிக்கையோடு உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை அங்கங்கே ஏற்பட்டது. அதன்காரணமாக, செவிலியர்களுக்குக் கூட குறைந்த அளவு உயரம் வைக்கப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு எதிலே முன்னுரிமை கொடுப்பதனால் சமுதாயத்திற்கு நன்மை கிடைக்குமோ, அதில்தான் கொடுக்கலாமே தவிர எல்லாத் துறைகளிலும் முன்னுரிமை கொடுப்பது என்பது பொருந்தாது